1981 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 54—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 9,58,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

8. அரசினர் தீர்மானம்.

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31, தளர்த்தப்பட்டு, நாளை (30-4-1981 அன்று) மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் தொடங்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறை வேற்றப்பெற்றது.

4. அறிவிப்பு—(தொடர்ச்சி).

ஆ. அலுவல் ஆய்வுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளை காலை 8-30 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழு என்னுடைய அறையிலே கூடும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (30-4-1981) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-14 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

267. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 7-2-1981 ஆம் தேதி யிடப்பெற்ற 347 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.